## காந்திபுரம் பகுதி

**அமைப்பாளர் :** ஜி.பி.தானீஸ் (எ) எம்.தானீஸ் அகமது, 88, கோகுலம் வீதி, ராம் நகர், கோவை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ம.ராஜன், 28, காந்தி நகர், சிவானந்தா காலனி, கோவை. (2) ரா.கதிரவன், 225, 9–வது தெரு, காந்திபுரம், கோவை. (3) து.ராதாகிருஷ்ணன், 235, 6–வது வீதி, காந்திபுரம், கோவை. (4) சு.பிரசாந்த், 171–இ, காந்தி நகர், சிவானந்தா காலனி, கோவை. (5) மா.தீபக் சக்தி, 53, சாஸ்திரி சாலை, ராம் நகர், கோவை. (6) செ.கமலேஷ், 173, காந்தி நகர், சிவானந்தா காலனி, கோவை. (7) கி.தவஷிரன், 170, ஹட்கோ காலனி, டாடாபாத், கோவை.

## ராமநாதபுரம் பகுதி

**அமைப்பாளர் :** ச.கௌசிக்குமார், 99/1, கருப்பராயன் கோயில் வீதி, புலியகுளம், கோவை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ம.ரவிக்குமார், 263, சூரியன் தெரு, ராமநாதபுரம், கோவை. (2) ஜோ.செந்தில்குமார், 140/239, கல்லுக்குழி, புலியகுளம் சாலை, கோவை. (3) கா.கோபாலகிருஷ்ணன், 73, சுப்பிரமணிய கோயில் வீதி, மருதூர், ராமநாதபுரம், கோவை. (4) வெ.சஞ்சய், 142/1, அம்மன் நகர், பி.என்.பாளையம், கோவை. (5) ரா.சுஜித்குமார் 10–வது வீதி, திருவள்ளுவர் நகர், ராமநாதபுரம், கோவை. (6) அ.விமல், 83/48, திருமால் வீதி, ராமநாதபுரம், கோவை. (7) பி.பி.நிர்மல்குமார், 606, மணி லே–அவுட், பெரியார் நகர், கோவை.

## பெரிய கடைவீதி பகுதி–1

**அமைப்பாளர் :** செ.தினேஷ்குமார், 73, பட்டக்கார அய்யாசாமி கோயில் வீதி, கோவை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மு.பாலாஜி விக்னேஷ், 117, தியாகராய புது வீதி–1, மரக்கடை, கோவை. (2) பா.ரமேஷ்குமார், 345, வைசியாள் வீதி, கோவை. (3) ஜெ.அக்பர் பாஷா, பி.ஐ.–12, பி அண்டு டி குவாட்டர்ஸ், என்.எஸ்.ஆர். சாலை, சாய்பாபா காலனி, கோவை. (4) ரா.கோபி ஆனந்த், 15, ரகுபதி லே அவுட்–1, சாய்பாபா காலனி, கோவை. (5) ர.விக்னேஷ், 41, ரங்கா கவுடர் வீதி, பூ மார்க்கெட், கோவை. (6) ர.அஸ்வின்குமார், 62, ரங்க சாமி வீதி, ஆர்.எஸ்.புரம், கோவை. (7) செ.திருவேங்கட கிருஷ்ணன், 105, தெப்பக்குளம் வீதி–1, கோவை. (8) த.பிரதீப்குமார், 10, அனுமந்தராயர் கோயில் சந்து, ரங்கா கவுடர் வீதி, கோவை.

## பெரிய கடை வீதி பகுதி–2

**அமைப்பாளர் :** அ.ஆமின், 24/40, வி.சி.கே. லே–அவுட், திருச்சி சாலை, கோவை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) வி.சூரியா பிரசாத், 392/129, அனுப்பர்பாளையம், சோமசுந்தரம் மில் சாலை, ராம் நகர், கோவை. (2) ச.ஆனந்த்பிரபு ,104, திருநகர் இரண்டாம் வீதி, சுண்டக்காமுத்தூர் சாலை, கோவை. (3) லே.மு.தன்சில் ரஹ்மான், 13/21, லட்சுமணா தெரு, கோட்டை, கோவை. (4) கு.சுமேஷ், 167, காளீஸ்வரா நகர், காட்டூர், ராம் நகர், கோவை. (5) ச.சரத்குமார், 437, கெம்பட்டி காலனி, கோவை. (6) சி.அரவிந்தன், 105/4–பி, சி.எம்.சி காலனி, வி.ஹெச். சாலை, கோவை.

## கணபதி பகுதி

**அமைப்பாளர் :** மு.பாபுகணேஷ், 27, அண்ணா நகர், இரத்தினபுரி, கோவை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மூ.செல்வேந்திரன், 59, மகேஸ்வரி நகர், இரத்தினபுரி, கோவை. (2) செ.பூபாலன், 33, ரங்கண்ணன் வீதி, இரத்தினபுரி, கோவை. (3) ம.ஜெகதீஷ், 47, நாடார் வீதி, கணபதி, கோவை. (4) கே.ஜெயசூர்யா, 83, கணபதிப்புதூர், 6–வது வீதி, கணபதி, கோவை. (5) தா.ஆலன் சாம், 5, சுப்பாத்தாள் லே–அவுட் 3–வது குறுக்குத்தெரு, இரத்தினபுரி, கோவை. (6) பா.அசோக்குமார் (எ) கார்த்திக், 54, கட்டபொம்மன் வீதி, கணபதி, கோவை. (7) பா.மனோஜ் (எ) லோகேஷ், 73/123, 6–வது வீதி, கணபதிப் புதூர், கோவை.

## மணியக்காரன்பாளையம் பகுதி

**அமைப்பாளர் :** கோவை அருண்பிரசாந்த், ஹெச்.ஏ–4, அன்பு இல்லம், கணபதி மாநகர், கோவை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) எல்.செந்தில்குமார், 1895, காந்தி மாநகர், பீளமேடு, கோவை. (2) ஆர்.டி.சுதர்சன், 6–ஏ, ரங்கநாதர் வீதி, ராமகிருஷ்ணாபுரம், கணபதி, கோவை. (3) ரா.மனோஜ்குமார், 78, சங்கரலிங்கனார் வீதி, மணியக்காரன்பாளையம், கணபதி, கோவை. (4) சு.அஜய், 43–ஏ/3–ஏ, இளங்கோ நகர், மணியக்காரன்பாளையம், கணபதி, கோவை. (5) ரா.தீனதயாள், எல்.ஐ.ஜி–1, 2708, காந்தி மாநகர், பீளமேடு, கோவை. (6) ரா.அஜீத்குமார், இ.டபுள்யூ.எஸ்.பி–1872, காந்தி மாநகர், பீளமேடு, கோவை. (7) மா.புகழேந்தி, 4100/1604, காந்தி மாநகர், பீளமேடு, கோவை.

## சாய்பாபா காலனி பகுதி

**அமைப்பாளர் :** ந.உமர், 61, அம்மாசை கோனார் வீதி, கே.கே.புதூர், கோவை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) த.ஸ்ரீனிவாசன், 19–டி, தியாகி குமரன் வீதி, வேலாண்டிப்பாளையம், கோவை. (2) ச.கௌதம், 14, கண்ணுசாமி கவுண்டர் வீதி, ரத்தினபுரி, சங்கனூர், கோவை. (3) இரா.பாலசந்தர், 383, சம்பத் வீதி, இரத்தினபுரி, கோவை. (4) பா.ஆனந்தபிரகாஷ், 30–சி, கருப்புசாமி நகர், ஹவுசிங் யூனிட், கவுண்டம் பாளையம், கோவை. (5) எஸ்.நஸ்ருதீன், 61, சேர்மன் ராஜூ நகர், கே.கே.புதூர், கோவை.

## வேலாண்டிப்பாளையம் பகுதி

**அமைப்பாளர் :** கோவை நவாப் (எ) ஏ.ஹெச்.முகமது நவாப் உசேன், 17/1–பி, கணபதி லே அவுட், கே.கே.புதூர், கோவை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) வெ.அசோக்குமார், 14/264, மருத கோனார் வீதி, வேலாண்டிப்பாளையம், கோவை. (2) ப.கண்ணன், 4, பழனி கோனார் வீதி, வேலாண்டிப் பாளையம், கோவை. (3) வெ.தர்மராஜ், 42, சுப்ரமணியபுரம் வீதி–1, வெங்கிட்டாபுரம், கோவை. (4) சு.ஹரிஹரன், 10–சி, சிந்தாமணி நகர், கே.கே.புதூர், சாய்பாபா காலனி, கோவை. (5) ர.அழகிரி, 20, அண்ணா நகர், கே.கே.புதூர், கோவை. (6) இரா.பாலு மணி, 34–ஏ, கட்டபொம்மன் வீதி, கோனார் லே–அவுட், வேலாண்டிப்பாளையம், கோவை.

## வடவள்ளி பகுதி

**அமைப்பாளர் :** தெய்வம் ஜெயசூர்யா, 29, தெய்வம் இல்லம், நல்லா கவுண்டர் வீதி, வடவள்ளி, கோவை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) சி.பாண்டி, 10/32, எம்.ஜி.ஆர் நகர், வடவள்ளி, கோவை. (2) ம .கார்த்திகேயன், 30, அம்மன் கோயில் வீதி, வடவள்ளி, கோவை. (3) மு.பாலு, 21, ராஜீவ் காந்தி நகர், வடவள்ளி, கோவை. (4) செ.பூபாலன், 7/71, பொம்மியம்மன் கோயில் வீதி, பொம்மனம்பாளையம், கோவை. (5) சி.ராகுல், ஆயிக்கவுண்டர் தோட்டம், மருதமலை பிரதான சாலை, வடவள்ளி, கோவை. (6) ர.மனோஜ்குமார், 3/6, தென்றல் நகர், வீரகேரளம், கோவை.

## பி.என்.புதூர் பகுதி

**அமைப்பாளர் :** சு.தினேஷ்குமார், 120, திலகர் வீதி–1, சீரநாயக்கன்பாளையம், கோவை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ச.ஹரிபிரசாந்த், 75–இ, அண்ணா நகர், சீரநாயக்கன்பாளையம், கோவை. (2) பா.குணசேகரன், 8/15, தியாகி குமரன் வீதி, பி.என்.புதூர், கோவை. (3) பா.கோகுல்கண்ணன், 6–92, மும்மநாயக்கர் வீதி, பி.என்.புதூர், கோவை. (4) நா.ராஜேஷ்குமார், 219–இ, நாயக்கர் தோட்டம், பூசாரிப்பாளையம், கோவை. (5) ரா.சக்திவேல், 132/–ஏ–1, ராதாகிருஷ்ணன் வீதி, சீரநாயக்கன்பாளையம், கோவை. (6) உ.பிரபாஞ்குமார், 39/8, 7–வது வீதி, கோகுலம் காலனி, வீரக்கேரளம், கோவை.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 26–04–2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி

---

எம்–சாண்டு, பி–சாண்டு – ஜல்லிக்கு

# ஏற்றப்பட்ட விலையிலிருந்து ரூ.1000 குறைப்பு!

### நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு!

சென்னை, ஏப்.28-

எம்சாண்டு பி-சாண்டு மற்றும் ஜல்லி ஆகியவற்றிக்கு ஏற்றப்படட விலையிலிருந்து ரூ.1000/ குறைத்து விற்பனை செய்திடவும், சாதாரண கற்கள் மீதான சீனியரேஜ் தொகையை மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.33/ நிர்ணயித்திடவும் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவெடுக் கப்பட்டது.

சென்னை, தலைமைச் செயலகத்தில் நேற்று (27.04.2025) நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில், கல்குவாரி, கிரஷர்கள் மற்றும் லாரி உரிமையாளர்கள் சங்கம் 25.04.2025 நாளிட்ட மனுவில் தெரிவித்துள்ள கோரிக்கைகள் தொடர்பான கூட்டம் நடைபெற்றன.

இக்கூட்டத்தில் மனுவில் குறிப்பிட்டுள்ள பொருள் குறித்து விவாதிக்கப்பட்டு கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

இதன்படி, கல்குவாரி, கிரஷர் மற்றும் லாரி உரிமையாளர்கள் சங்கம் எம் சாண்டு பி சாண்டு மற்றும் ஜல்லி ஆகியவற்றிக்கு ஏற்றப்படட விலையிலிருந்து ரூ.1000/ குறைத்து விற்பனை செய்யப்படும் என சங்கத்தினரால் ஏற்கப்பட்டது.

சாதாரண கற்கள் மீதான சீனியரேஜ் தொகையை மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.33/ என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்கான அரசாணை ஒரு வார காலத்திற்குள் வெளியிடப்படும்.

இக்கூட்டத்தில், இயற்கை வளங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கே. பணீந்திர ரெட்டி, புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர் எ.சரவண வேல்ராஜ், கல்குவாரி, கிரஷர் மற்றும் லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கே.சின்னசாமி, சங்கத்தின் உறுப்பினர்கள், புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் இணை இயக்குநர்கள் மற்றும் துணை இயக்குநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சென்னை கிழக்கு கடற்கரை சாலை முட்டுக்காடு பகுதியில் கலைஞர் பன்னாட்டு மாநாட்டு அரங்கம் அமைக்கும் பணியினை பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் . எ.வ.வேலு நேற்று (27.4.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின்போது பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை உயர் அலுவலர்கள், தலைமைப் பொறியாளர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

---

பொதுச்செயலாளர் துரைமுருகன் முன்னிலை – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரை!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் - மயிலை த.வேலு எம்.எல்.ஏ. இல்ல மணவிழா!

### பொருளாளர் டி.ஆர்.பாலு – கே.என்.நேரு – ஐ.பெரியசாமி – ஆ.இராசா – கனிமொழி கருணாநிதி – முன்னணியினர் வாழ்த்து!

சென்னை, ஏப். 28 -

சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு இல்லத் திருமண விழா 30.4.2025 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு மேல் மாலை 6.00 மணிக்கு கலைஞர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., - வே.சுசிலா ஆகியோரது மூத்த புதல்வி வே.அனுஷா - ரங்கராஜன் - லதா ஆகியோரது புதல்வர் ர.தருண் தன்ராஜ் ஆகியோரது திருமணம் 30.4.2025



புதன்கிழமை காலை 9.00 மணி முதல் 10.30 மணிக்குள்ளாக அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார்.

கழகப் பொதுச் செயலாளர் -நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் முன்னிலை வகித்துப் பேசுகிறார்

கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மணவிழாவை நடத்தி வைத்து வாழ்த்துரை வழங்குகிறார்.

மேலும் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர்கள் கே.என். நேரு, ஐ.பெரியசாமி, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் ஆ.இராசா எம்.பி., கனிமொழி கருணாநிதி எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்புச் செயலாளர் டி.கே.எஸ்.இளங்கோவன், இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, அமைச்சர் பெருமக்கள், மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதிச் செயலாளர்கள், மேயர், துணை மேயர் உள்ளிட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகள், வட்டச் செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

---

சென்னை கிழக்கு கடற்கரைச் சாலை – முட்டுக்காட்டில்

# உலகத் தரத்தில் கலைஞர் பன்னாட்டு மாநாட்டு அரங்கம்!

### அமைச்சர் எ.வ.வேலு பணிகளை ஆய்வு செய்தார்!

சென்னை, ஏப்.28-

முதலமைச்சர் அவர்கள், நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில், சென்னையில் புதிய உலகத் தரமான பன்னாட்டு அரங்கம் நிறுவப்படும் என 2.6.2023 அன்று அறிவித்தார்கள்.

இந்த அறிவிப்பின்படி, அரசாணை (நிலை) எண்: 23, பொதுப்பணித் (ஓய் 1) துறை, நாள்: 4.9.2024 அன்று, ரூ.525 கோடி மதிப்பீட்டில், செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் தாலுகா, முட்டுக்காட்டில் 'கலைஞர் பன்னாட்டு மாநாட்டுஅரங்கம் மையம்' கட்ட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதற்காக, அரசாணை (நிலை) எண்: 20, பொதுப் பணித் (ஓய் 1) துறை, நாள்: 5.8.2024 அன்று, செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காடு கிராமம், கிழக்குக் கடற்கரைச் சாலையில் 37.99 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி நில மாற்றம் செய்ய பொதுப்பணித் துறை ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்த நிலத்தில் புதிய கட்டடம் உருவாக்கப்பட உள்ளது.

மேலும்,ரூ.525 கோடி மதிப்பீட்டிலான இந்த திட்டத்தின் கீழ், சுமார் 5,000 இருக்கைகள் கொண்ட மாநாட்டுக் கூடம், 10,000 பேர் பார்வையிடும் வசதி கொண்ட கண்காட்சி அரங்கம், கூட்ட அரங்குகளுக்கான அரங்கம் ஆகியன அமைய உள்ளன. இந்த பன்னாட்டு அரங்கத்தில் திறந்த வெளி அரங்கம், உணவு விடுதிகள், சுமார் 10,000 வாகனங்களை நிறுத்தும் அளவுக்கு வாகன நிறுத்த வசதிகள், சாலை வசதி, நுழைவு வாயில், சுற்றுச் சூழல் வசதி என அனைத்து வசதிகளுடன் உலகத் தரத்தில் அமைக்கப்பட உள்ளது.

இப்பணியினை 2025ம் ஆண்டு இறுதியில் அல்லது 2026ம் ஆண்டு தொடக்கத்தில் முடிக்க பொதுப்பணித் துறை திட்டமிட்டுள்ளது. தற்போதைய பணிகளின் நிலை தொடர்பாகவும் கூடுதலாக மேற்கொள்ளப் பட்ட வேண்டிய பணிகள் குறித்தும் மாண்புமிகு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள்பொதுப்பணித் துறை கூடுதல்தலைமைச்செயலாளர்திரு.மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., அவர்களுடன்நேரில்ஆய்வு மேற்கொண்டு அதிகாரிகளிடம் பணிகளின் நிலைகள் குறித்து விவாதித்தார்.

இந்த ஆய்வின்போது, பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை உயர் அதிகாரிகள், தலைமைப் பொறியாளர்கள் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

---



அமைச்சர்கள் பி. மூர்த்தி, பி.கே.சேகர்பாபு ஆகியோர் மதுரை கள்ளழகர் திருக்கோயிலில் ரூ. 1.20 கோடி செலவில் வாங்கப்பட்ட 4 புதிய சிற்றுந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்தனர். உடன் இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர்கள் சி. மாரியப்பன், கே.செல்லதுரை, திருக்கோயில் துணை ஆணையர்/ செயல் அலுவலர் ந.யக்ஞநாராயணன், திருக்கோயில் அறங்காவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

---

# மதுராந்தகத்தில் போக்குவரத்துக் கழக 19 வாரிசுதாரர்களுக்கு பணி ஆணைகள்!

### அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் – க.சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கினர்! மலர்விழிகுமார் பங்கேற்பு!

காஞ்சிபுரம், ஏப். 28 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட விழுப்புரம் போக்குவரத் துத் துறையில் பணியாற்றிய 19 வாரிசுதார்களுக்கு பணி நியமன ஆணையினை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. ஆகியோர் பயனாளிகளுக்கு வழங்கினர்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் விழுப்புரம் கோட்டம் அனைத்து மண்டலங்களில் பணியின் போது இறந்த பணியாளர்களின் வாரிசு தாரர்கள் 19 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கும் நிகழ்ச்சி மதுராந்தகம் போக்குவரத்து கழக பணிமனையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எ.எல்.எ. ஆகியோர் கலந்து கொண்டு வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணையை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் மதுராந்தகம் நகர மன்ற தலைவர் மலர்விழி குமார், விழுப்புரம் மண்டல நிர்வாக இயக்குனர் குணசேகரன், விழுப்புரம் பொது மேலாளர் ரவீந்திரன்,

காஞ்சிபுரம் மண்டல தொமுச பொதுச் செயலாளர் ரவி, தலைவர் சுதாகரன், பொருளாளர் முரளி, துணை செயலாளர் தனசேகரன், அச்சிறுப்பாக்கம் ஒன்றிய குழு பெருந்தலைவர் கண்ணன், மதுராந்தகம் நகரக் கழகச் செயலாளர் கே.குமார், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் தம்பு, சரவணன், சிவக்குமார் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள், முன்னணியினர் கலந்து கொண்டனர்.